10th August 1960]

Cinema theatres

* 86 *Q*.—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரவு குறிப்பிட்ட நேரத்திற்குமேல் நடைபெறும் சினிமாத் தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) அப்படியானால், 1960-ல் இதுவரை எத்தனை தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) One in Thanjavur and one in Madras.

SRI N. R. THIAGARAJAN: ஸார், குறிப்பிட்ட படம் ஓடும் தியேட்டர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக, அபராதம் மட்டும் விதிக்கும் முறையை கையாள்வார்களா ? படங்கள் 15,000 அடிக்கு மேல் போவதால்தான் அதிக நேரம் ஓட வேண்டிவருகிறது. ஆகவே, படங்கள் 15,000 அடிக்குக்குறைவாகத் தயாரிக்கச் சட்டம் போட்டு விதி வகுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: சஸ்பெண்ட் பண்ணினாலே, அது அபராதத்திற்கு மேல் வரும்படி குறைகிறது, செலவினங்கள் ஏற்படுகின்றன. படத்தின் நீளத்தை குறைப்பது பற்றி இந்தக் கேள்வியில் பதில் சொல்ல முடியாது.

Common Police Force for the Southern Zone

* 87 *Q*.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்மண்டலப் போலீஸ் படை ஒன்று அமைக்கும் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) இதில் சம்பந்தப்பட்ட ஏனைய மாநில சர்க்கார்கள் ஒத்துக்கொண்டு விட்டார்களா ?

(இ) இத் திட்டம் உருவானால் எப்போது அமுலுக்கு வரும் ?

(ஈ) அதன் மூலம் இம்மாநிலத்திற்குள்ள அனுகூலங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*), (*b*) & (*c*).—The matter is still in the stage of consideration by the Inspector-General of Police of the States in Southern Zone.

(*d*) In cases of emergencies in this State, the entire personnel of the Common Armed Police Reserve will become available for use in this State and it wil ease the burden of the State in respect of keeping an armed reserve in sufficient strength to meet an emergency.